1993 மார்ச் 18]

இந்தத் திட்டத்தை நிறைவேற்றி தருவாரா என கேட்டுக் கொண்டு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் பணிவான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேள்வி கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : உறுப்பினருடைய தொகுதி மக்கள் மீது வைத்துக்கொண்டிருக்கிற நம்பிக்கை வெளிப்பாடாகத்தான் மிக ஆர்வத்தோடு எப்படியும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக இந்த அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 130, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

130—

போளூர் - அத்திமூர் சாலையில் மஞ்சள் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுதல்

*12100—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் — அத்திமூர் சாலையில் மஞ்சள் ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் கொண்ட அத்திமூர் மக்களுக்கு எல்லாம்

பயன்படக்கூடிய ஒரு பாலம். அதே நேரத்தில் போளூரிலிருந்து ஜமுனா-முதூர் செல்வதற்கு இந்த மஞ்சள் ஆற்றின் குறுக்கே-வழியாகத்தான் செல்ல வேண்டிய ஒரு முக்கியமான கட்டமாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியினுடைய மக்கள் நலனைக் கருதி பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிற பாலம், ஒரு தரைமட்டப் பாலம் தான் இப்பொழுது இருக்கிறது. மேம்பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கிறார். ஏறத்தாழ 30 இலட்சம் ரூபாய்க்கு மேலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு கோரிக்கைகள் இந்த அரசிடத்திலே வந்துகொண்டிருக்கிற காரணத்தாலே எல்லாத் தொகுதிகளிலும் இருக்கின்ற, ஏற்கெனவே வழித்தடங்கள் உள்ள பாலங்களை நாங்கள் எடுப்பதில்லை. இல்லாத இடங்களுக்குத் தான் முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தாம்போகித் தரைப்பாலம் இப்பொழுது நடைமுறையிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே இருக்கின்ற நிதியாதாரத்தைப் பொறுத்து இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதற்கு நன்றி. இருப்பினும் அந்தத் தரைப்பாலம் என்பது அத்திமூர் பகுதியினுடைய களியம் காலனி வாழ் மக்கள் பகுதியிலே இருக்கின்ற காரணத்தால், இந்தத் தரைப்பாலத்தினால் தண்ணீர் தேங்கி நிற்கின்ற ஒரு பெரிய காரணத்தால் ஏறத்தாழ ஒரு 1,500 குடும்பங்கள் இருக்கக்கூடிய அந்தக் காலனி பகுதி மழைக்காலங்களில் தண்ணீர் நிரம்பி விடுகிறது. அதேபோன்று கடந்த மழைக்காலத்தில் கூட நான் என்னுடைய தொகுதியிலிருந்து போளூர் நகரத்திற்கே வர முடியாத சூழ்நிலை, இரண்டு நாட்கள் என்னுடைய வீட்டிலேயே இருந்தேன். காரணம் என்னவென்றால் அந்த அளவிற்கு தண்ணீர் அந்த மஞ்சள் ஆற்றில் ஓடுவதால் கிராமப் பகுதி மக்கள் நகர்ப் பகுதிக்கு, சட்டமன்ற உறுப்பினராலேயே வரமுடியாத அளவிற்கு இருக்கக்கூடிய ஒரு ஆறாக இருக்கின்ற காரணத்தால் தயவு செய்து மீண்டும் இதனை பரிசீலனை செய்து வரும் நிதியாண்டிலாவது சேர்த்து இதனைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் உதவுவாரா எனக்கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் வருடம் பூராவும் வர முடியாத அளவுக்கு அங்கே பாதகம் இல்லை. மழைக் காலங்களில் ஒரு வார காலத்திற்கு அந்தப் பிரச்சினை

1993 மார்ச் 18]

இருக்கிறது என்பதை இந்த அரசு அறியும். மழை நீர் அங்கே தேங்கியிருக்கிறது என்பதை அரசு அறியும். ஆக மழைக் காலத்தில் ஒரு வார காலத்திற்கு அங்கே மழை நீர் தேங்கி ஏற்கெனவே ஒரு பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. அது இந்த அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் தற்சமயம் இருக்கிற சூழ்நிலையில் அதை எடுத்துச் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கிற நிதியாதாரங்களைப் பொறுத்துத்தான் செய்ய முடியும். எனினும் அதற்கு முன்னுரிமை கொடுத்து வருகிற நிதியாண்டில் அதை எடுத்துக்கொள்ளலாமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதிநிலையைச் சுட்டிக்காட்டி அடுத்த நிதியாண்டிலேயே பரிசீலிக்கலாமா என்று எண்ணுகிறேன் என்று சொன்னார்கள். இந்த மஞ்சள் ஆற்றுப் பாலம் என்பது—ஜமுனா முத்தூர் என்றால் ஜவ்வாது மலை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற ட்ரைபல் மக்கள் மருத்துவ வசதிக்காகச் செல்வதாக இருந்தாலும், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவேண்டும் என்று சொன்னாலும் இந்தப் பாலத்தைத் தான் பயன்படுத்த வேண்டும். அங்கே ட்ரைபல் மக்களும், எஸ்.சி. மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் வரவில்லை என்ற ஆதங்கத்தில் சொல்லவில்லை. அந்த போளூர் நகரத்திற்கு வரவேண்டும் என்றால் அந்தத் தொகுதியில் இருக்கின்ற பெரும்பாலான வாக்காளர்களும், பொதுமக்களும் அந்தப் பாலத்தைத்தான் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுவும் மழைக்காலம் வருகிறபோது 6 மாத காலம் மக்கள் பள்ளிகளுக்கு குழந்தைகளை அனுப்புவதில்லை. அவர்கள் அப்போது வேலை செய்வதற்கு செல்ல முடியவில்லை. மருத்துவ வசதி பெறுவதற்கும் வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. அந்தப் பாலத்தை அமைப்பார்களேயானால் அந்தத் தொகுதியில் இருக்கிற பெரும்பாலான மக்கள் போளூருக்கு வந்து செல்ல வாய்ப்பாக இருக்கும். ஆகவே தமிழக அரசு இந்த நிதி ஆண்டில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு, தரைப்பாலம் என்று தட்டிக் கழித்துவிடாமல் அந்தப் பாலத்தைச் சீர் செய்து கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல இன்றைக்கு, நேற்றைக்கு ஏற்பட்ட பிரச்சினை அல்ல அது. 40, 45 ஆண்டுக் காலமாக சுதந்திரம் அடைந்ததிலிருந்து இருக்கிறது. ஆனால், நமக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் இந்த இரண்டாண்டுக் காலத்திலே தீர்க்க வேண்டுமென்று புரட்சித்

தலைவி ஆட்சிக் காலத்திலே தீர்க்க வேண்டுமென்று எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எண்ணுகிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களும் எண்ணுகிறார்கள். அதற்கேற்பத்தான் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையிலே பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே தீட்டி எந்த அரசும் அதாவது காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி தி.மு.க. அரசாக இருந்தாலும் சரி யாரும் செய்யாத அளவுக்கு இரண்டு மடங்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்து வேண்டியன செய்துகொண்டு இருக்கிறோம்.

ஆனால் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பாலங்களைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் சாலைகளைப் போட வேண்டும் என்று சொன்னால் பல ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இருக்கிற நிதியாதாரங்களை வைத்து ஏற்கெனவே போக்குவரத்து வசதியே இல்லாத இடங்களில் உரிய ஏற்பாடு செய்து அவற்றை மேம்படுத்த வேண்டும்; இல்லாத இடங்களுக்கு பாலம் கட்ட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய முதல் குறிக்கோள். இருக்கின்ற பாலங்களை மேம்படுத்த வேண்டும் என்பது இரண்டாவது குறிக்கோள். ஆகவேதான் முன்னுரிமை கொடுத்து செய்யப்படுகிற அடிப்படையில் இது வரவில்லை என்பதை நான் தெரிவித்தேன். ஆகவே மலைவாழ் மக்களின் மீதும் ஏழை எளிய அரிசன மக்களின் மீதும் இந்த அரசு கொண்டிருக்கிற அளவுக்கு எந்த அரசும் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மலைவாழ் மக்களுக்குச் சாலை வசதி செய்து தருவதற்காக பல கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதனை மானியக் கோரிக்கையிலே தெரிவிப்பேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த அரசு அதற்கான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 131, திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கா. சின்னசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திருமதி. க. பழனியம்மாள் கேட்கிறார்.

131—

மோகனூரிலிருந்து இராசிபுரம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*9983-ஏ—<u>திரு. கா. சின்னசாமி</u>: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மோகனூரிலிருந்து இராசிபுரம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?